செ.வெ. எண் :448 நாள் : **18.7.2007**

## செய்தி வெளியீடு – 18.7.2007

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையில் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் மருத்துவமனைகளின் செயல்பாடுகள் குறித்து இன்று (18.7.2007) தலைமைச் செயலகத்தில் ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், தலைமைச்செயலர், நிதித்துறை செயலர், மக்கள் நல்வாழ்வுத்துறை செயலர், தமிழ்நாடு சுகாதாரத் திட்ட இயக்குநர், பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்ட இயக்குநர், எய்ட்ஸ் கட்டுப்பாடு திட்ட இயக்குநர், தமிழ்நாடு மருத்துவப்பணிகள் கழக மேலாண்மை இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், பொது சுகாதாரத்துறை இயக்குநர் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.**

**மருத்துவர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், மருத்துவர்கள் அனைவரும் தொண்டு மனப்பான்மையுடன் பணி புரிந்து ஏழை எளியவர்கள் நலம் பெற உதவிட வேண்டும் என்று இந்த ஆய்வின் போது குறிப்பிட்டார். 'வருமுன் காப்போம் திட்டம்' மீண்டும் நடைமுறைப்படுத்தப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றமைக்கும், அதன் காரணமாக முகாம்களில் மக்கள் அதிக அளவில் கலந்துகொண்டு பயன்பெற்று வருகின்றமைக்கும் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்ததுடன், மருத்துவ முகாம்களைச் சிறப்பான முறையில் அமைத்து வருகின்ற அனைவருக்கும் தமது பாராட்டுகளையும் தெரிவித்தார்.**

**கண்புரை காணப்படும் அனைவருக்கும் கண்புரை அறுவை சிகிச்சை அளித்து இலவசமாகக் கண்ணாடி வழங்கிடும் பணிகளை உடனுக்குடன் மேற்கொள்ளவும் ;**

**டாக்டர் முத்துலட்சுமிரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 160 கோடி ரூபாய் தொகையைப் பயன்படுத்தி, ஏழை கர்ப்பிணிப் பெண்கள் அனைவருக்கும் உரிய காலத்தில் எந்தவித தாமதமுமின்றி நிதி உதவிகளை வழங்கிட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்; ஒவ்வொரு கர்ப்பிணிப் பெண்ணுக்கும் வழங்கும் ஆறாயிரம் ரூபாய் நிதி உதவியை இரண்டு**

தவணைகளில் வழங்கவும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார்கள்.

மேலும் இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு சுகாதாரத் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ள 235 மருத்துவ மனைகளிலும் கட்டடப் பணிகளை உடனடியாகத் தொடங்கிட நடவடிக்கைகள் எடுத்திடவும், திட்டப்பணிகள் அனைத்தையும் குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் நிறைவேற்றி முடித்திட தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதென்றும்;

விழுப்புரம், தர்மபுரி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லுரிகளுக்கான கட்டடப் பணிகள் அனைத்தையும் உடனடியாகத் தொடங்கி, அடுத்த 2008–2009ஆம் ஆண்டில் மாணவர்களைச் சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வதென்றும்;

அனைத்து அரசு மருத்துவமனைகளையும், ஆரம்ப சுகாதார நிலையங்களையும் தூய்மையாகப் பராமரித்திடவும், சிகிச்சைக்கு வரும் பொதுமக்களுக்குத் தேவைப்படும் தரமான மருந்துகளைத் தங்குதடையின்றி வழங்கிடவும், மருத்துவமனைகளில் உள்ள மருத்துவ உபகரணங்களை முறையாகப் பராமரிப்பதுடன், மேலும் தேவைப்படும் மருத்துவ உபகரணங்களை வழங்கி, ஏழை எளியவர்கள் பயனடையும் வகையில் அவற்றைப் பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதென்றும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த ஆய்வின்போது யுனிசெஃப் நிறுவனம் ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான சிசு பராமரிப்புக்கான ஆறு சிறப்பு ஊர்திகளை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கியது. யுனிசெஃப் நிறுவனத்திற்கு தமிழக அரசின் சார்பில் தமது நன்றியை மகிழ்ச்சியுடன் தெரிவித்த முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்த சிறப்பு ஊர்திகள் கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களின் மருத்துவப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்று கூறி அவற்றை மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறைச் செயலாளரிடம் வழங்கினார்.

***

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9.